# ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,124 புரட்டாசி மாதம்

## "இந்துவேதத்தின் மூலம்தான் சமுதாய ஒற்றுமையையும், சமத்துவத்தையும் உருவாக்க முடியும்!"



'ஒரு நாட்டில் தோன்றிய மதம் அந்த நாட்டிற்குள் மட்டுமே வாழ வேண்டும்' என்ற கொள்கையையும், குறிக்கோளையும் வலியுறுத்திக் காட்டுகிறது இந்து மதம்.

இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,124ஆம் ஆண்டின் புரட்டாசி மாத வெளியீடு.**

**தலைப்பு: இந்துவேதத்தின் மூலம்தான் சமுதாய ஒற்றுமையையும், சமத்துவத்தையும் உருவாக்க முடியும்!**

# உள்ளுறை

1. **“குன்றக்குடி அடிகளாருக்கு அறிவிப்பு அழைப்பு வேண்டுகோள்”** - தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு குருதேவர் தலைமைப்பீடத்திலிருந்து இந்துவேதக் கருத்துக்களை வழங்கி 1991இல் விடுத்த நெடிய விளக்க அஞ்சல்.
2. **“செயல்நலம் பாராட்டுத் திருவோலை”** - இந்துவேத மாநாட்டிற்கான ஏற்பாடுகளை விரிந்து செயலாக்கிடுவதற்கு அருளாணை பெற்ற குருவாணையை விடுத்து குருதேவர் 1991இல் தமது அடியான் மூலம் அனைவருக்கும் விடுத்த நெடிய கட்டுரை அஞ்சல்.
3. **“பிறமண் அருளிய இந்து வேதம்”** - பிறமணின் இந்து வேதத்திலிருந்து குருதேவர் அருளிய கருத்துக்களில் ஒன்று.

# குன்றக்குடி அடிகளாருக்கு அறிவிப்பு அழைப்பு வேண்டுகோள்!

பொன்னேரி,
21-10-91.

அனுப்புநர்:-

ஞானாச்சாரியார், இந்துமதத் தலைமை ஆச்சாரியார்,
இந்துமதத் தலைமைக் குருபீடம், இந்துவேத நாயகம்,
இந்துவேத பீடம், இந்துமதத் தந்தை,
பதினெண்சித்தர் மடம், குருமகா சன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,
13, குமாரசாமி முதலி தெரு,
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-53.

பெறுநர்:-

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்
குன்றக்குடி மடம்,
குன்றக்குடி.

**தொடர்பு:-** 'இந்தியா டுடே' மாதமிருமுறை வரும் ஏடு: பக்கம் 90 முதல் 91 முடிய உள்ள கட்டுரை.

தவத்திரு அடிகளார் அவர்கள் சமூகத்திற்கு, பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை அலுவலகத்திலிருந்து குருபீடத்தின் திருவுளக் கருத்து எழுதப்படுகிறது.

1) தாங்கள் அருளுலகில் செயல்பட்டுக் கொண்டே பொருளியலாகத் தங்களுடைய ஆதீனத்திற்குட்பட்ட மக்களுக்குச் செய்துள்ள பேருதவிகள் 'இந்தியா டுடே' மாதமிருமுறை ஏட்டில் வெளி வந்துள்ளது கண்டு குருபீடம் மிகவும் மகிழ்ந்தார். திருவருளை வழுத்தித் தமது விதந்து பாராட்டுதலைத் தங்களுக்கு தெரிவிக்கச் சொன்னார்.

2) இந்தக் கட்டுரையில் தாங்கள் திருவாய் மலர்ந்தருளியதாக வந்துள்ள "... முஸ்லீம் லீக் என்ற கட்சியை நாம் ஏன் அங்கீகாரம் செய்தோம்? முஸ்லீம்கள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். அப்படியிருக்க மதத்தின் பெயரில் எதற்கு ஒரு கட்சி? அன்று செய்த தவறினால், பிறகு மதத்தின் பெயரில் தோன்ற ஆரம்பித்த மற்ற கட்சிகளுக்குத் தடை செய்ய முடியவில்லை ...." என்ற வாசகங்கள் குருபீடத்திற்குப் படித்துக் காட்டப்பட்ட போது குருபீடம் மிகவும் மகிழ்ந்தார். தங்களை '**<u>அரசியல் ஞானி</u>**' என்றும்; இன்றைய '**<u>சமுதாய இயல் மேதை</u>**' என்றும் பாராட்டி மகிழ்ந்தார். தங்களைப் போன்றவரால்தான் இன்றைய தமிழ்ச் சமுதாயத்திற்கும், தமிழ் மொழிக்கும் மிகச் சிறந்த வழிகாட்டியாக, வழித்துணையாகச் செயல்பட முடியும் என்று திருவருளை வாழ்த்தி கருத்துக்களைக் கூறினார்.

3) பதினெண்சித்தர் மடம், இம்மண்ணுலகுக்கு இந்து வேதத்தையும், இந்துவேத மதமான இந்து மதத்தையும் 43,73,092 ஆண்டுகளுக்கு முன்னால் (இன்றைய 1991இன் கணக்குப்படி) வழங்கி உலக மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டு வருகின்ற ஒரு மடம். இம் மாபெரும் தொன்மையுடைய இத் திருமடம், சித்தர் கருவூரார் பாரம்பரியத்திற்கு உரியதாக இருந்து அருளுலகுக்குரிய உயிர்ப்பு, புத்துயிர்ப்பு, பூசை, தவம், ஞானம், நோய்க்கலைகள், தேய்கலைகள், ஓய்கலைகள், மாய்கலைகள், பேய்க்கலைகள், தேவதைக் கலைகள்,

தெய்வீகக் கலைகள், கடவுட்கலைகள், ... முதலிய பல கலைகளையும் வளர்த்து இலைமறை காயாகவே செயல்பட்டு வந்துள்ளது. தமிழ்மொழியில், இந்துவேதத்தை நிலையாகக் காத்து வருகிறது. கலியுகம் பிறந்து 3000 ஆண்டுகள் கழித்துத் தோன்றிய ஹிந்துமதம் பற்றிய விவரங்களைக் காத்து வருகிறது.

இந்துமதம் - ஹிந்துமதம் வேறுபாடு பற்றிய பட்டியல் அச்சிடப்பட்டது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

4) "தமிழ் வாழ்க, சைவம் வாழ்க" என்ற முழக்கம் அண்மையில் மங்கி மறைந்து தேய்ந்து கிடக்கிறது. தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தமிழின உணர்ச்சியையும், தமிழ்மொழி உணர்ச்சியையும் அரசியல் ஈட்டம் கருதி வீணாக்கி விட்டார்கள். இவற்றிற்... ... ... ... ... ... ... ... ***(மூலநகலில் பக்க இறுதியில் வரிகள் கிடைக்க வில்லை)*** நிறைவாகப் பெற்றவர்களால் நல்ல குடும்பப் பாரம்பரியம் உள்ளவர்களால் ... தலைமை தாங்கி நிகழ்த்தப் படவில்லை, தலைமை தாங்கி நிகழ்த்தப் படவில்லை, தலைமை தாங்கி நிகழ்த்தப் படவில்லை, தலைமை தாங்கி நிகழ்த்தப் படவேயில்லை.

5) இப்படி, நமது சமுதாய, அரசியல் நிறுவன நிர்வாகங்கள் அனைத்திலும் ஏறத்தாழ நல்ல தகுதியுள்ள, தரமுள்ள, திரமுள்ள, திறமுள்ள தலைமைகள் பெரும்பாலும் இல்லாமல் போன காரணத்தினால்தான்; மேற்படி இரண்டு துறைகளிலும் வலுவான கொள்கைகள் இல்லை, வளமான குறிக்கோள்கள் இல்லை, தெளிவான செயல்முறைகள் இல்லை. எனவே, மிக விரைவில் ஆன்மீக வாதிகள், மதவாதிகள், பத்தியாளர்கள், அருளுலக ஈடுபாடு உள்ளவர்கள் நேரடியாகச் சமுதாயத்திற்கும், அரசியலுக்கும் தலைமை தாங்கிட, வழிகாட்டிட, வழித்துணையாகிட முன்வர வேண்டும், முன்வர வேண்டும், முன்வர வேண்டும், முன் வந்தேயாக வேண்டும். இல்லாவிட்டால்,

பெரும்பாலும் நமது சமுதாயமும், அரசியலும் பொதுநல விரோதிகளாலும், பொதுநல துரோகிகளாலும், தன்னல வெறியர்களாலும், பேராசை வெறியர்களாலும், குடிகேடர்களாலும், குறையுடையவர்களாலும், முறைகேடர்களாலும், நெறி பிறழ்ந்தவர்களாலுமே தொடர்ந்து தலைமை தாங்கப்பட்டு நமது முன்னோர்கள் வகுத்தளித்துள்ள அனைத்து வகையான வாழ்வியல் நடைமுறைகளும், மதிப்பீடுகளும், ஒழுகலாறுகளும், மரபுகளும், ... நலிந்து மெலிந்து சிதைந்து சீரழியவே நேரிட்டு விட்டது, நேரிடும்.

6) தாங்களே, குருதேவருக்கு முன்னுரை கூறியபோது, 'இந்து முன்னணி என்பது ஒரு போராட்டக் குழு', 'இந்து முன்னணி என்பது இந்து மதத்திற்கு ஏற்படக் கூடிய அல்லது விளையக் கூடிய அநீதிகளுக்கு முடிவு கட்டும் ஓர் அமைப்பு' என்று குறிப்பிட்டீர்கள். இதுதான் உண்மை. இது மிகவும் வரவேற்கப் படுகிறது.

7) அதாவது இந்துமதத்திற்கு இந்துமதத் துரோகிகளாலும், விரோதிகளாலும்; பதவி வெறியும், பண வெறியும், புகழ் வெறியும் மிகுதியாக உடைய தன்னலக்காரத் தலைவர்களாலும் பாதிப்புக்கள் ஏற்படும் போதெல்லாம்; அந்தப் பாதிப்பை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டு இந்துமதத்தைப் பாதுகாக்கும் பணியையே இந்து முன்னணி செய்கிறது. எனவே, காலங்கள் தோறும் இந்துமதத்திற்குப் பாதிப்புக்கள் வந்து கொண்டேயிருக்கும்; அவற்றை எதிர்த்து **இந்து முன்னணி** போராடிக் கொண்டேயிருக்கும்; இந்துக்களில் பலர் பசுங்குருதியைச் சிந்துவார்கள், கொட்டிக் கொண்டேயிருப்பார்கள்; இந்துக்களில் சிலர் தொடர்ந்து கொலையாகிக் கொண்டேயிருப்பார்கள்; பலியாகிக் கொண்டேயிருப்பார்கள்!!!...??? ...!!! ...??? ...!!! ...???

இதுதான் இந்து முன்னணியின் வரலாறு, செயல்சித்தாந்தம், வாழ்வியல் தத்துவம் ....

8) ஆனால்?! ஆனால்?! ஆனால்?! இம்மண்ணுலகிற்கு இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அருளிய பதினெண்சித்தர் மடாதிபதியும், பீடாதிபதியுமாகிய அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் தோற்றுவித்திருக்கின்ற **'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'** (இ.ம.இ. I.M.I.) என்ற அமைப்பும்; **'இந்து முன்னேற்றக் கழகம்'** (இ.மு.க. I.M.K.) என்ற அமைப்பும் இந்து மதத்துக்கு பாதிப்புக்களே ஏற்படாமல் தடுக்கக் கூடிய முன்னெச்சரிக்கையான பாதுகாப்புக்களையும், தற்காப்புக்களையும்; எவருமே இந்து மதத்தை நெருங்கி வர முடியாத அளவிற்கு வளவளர்ச்சி மிகு வலிமை நிலைகளையும் உருவாக்கித் தருகின்ற கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல் சித்தாந்தங்களையும், நடைமுறைத் தத்துவங்களையும் உடையவைதான். (இ.ம.இ.யும், இ.மு.க.வும்)

9) அதாவது இந்து மதத்துக்கு ஆபத்து வந்தவுடன் அந்த ஆபத்தை தடுத்து நிறுத்தி அகற்றிட முயற்சிப்பதுதான் இந்து முன்னணி. ஆனால், இந்து மதத்துக்கும், இந்து வேதத்துக்கும் எள்முனையளவு கூட எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் முன்னெச்சரிக்கையுடன் தற்காப்புப் பணி செய்பவைதான் இ.ம.இ.யும், இ.மு.க.வும். எனவே, தங்களைப் போன்று பாரம்பரியப் பெருமையும், உலகியல் தரமும், திரமும், தீரமும், வீரமும், உரமும், அறமும், மறமும், சொல்லாற்றலும், சுற்றத்தார் வளமும், நண்பர் வலிவும் உடையவர்கள் இந்துமதத்திற்கு பாதிப்பு ஏற்பட்ட பிறகு அந்தப் பாதிப்பை அகற்றுவதற்காகப் போராடி களப்பலிகளும், அவிர்ப்பலிகளும் கொடுத்துத்தான் தீர வேண்டுமா?! கொடுத்துத்தான் தீர வேண்டுமா?! கொடுத்துத்தான் தீர வேண்டுமா?!

10) அதாவது, தங்களுடைய அக்கறை, அறிவு, ஆற்றல், முயற்சி, காலம், கருத்து, ... முதலியவையெல்லாம் அனுவசியமாக <u>**அடிக்கடிப் போராட்டங்களில் வீணுவதை விட**</u> இந்துமதத்திற்குப் பாதிப்பே வராத; நல்ல, வளமான, வலிமையான, பொலிவான, தற்காப்பு ஆற்றல் மிகுந்த, பாதுகாப்புக்கள் மிகுந்த, துரோகிகளும் விரோதிகளும் அஞ்சுகின்ற ஒப்புயர்வற்ற நிலேகளே உருவாக்கிக் கொடுக்கும் பணியில் ஏன் ஈடுபடக் கூடாது நீங்கள்?!, ஏன் ஈடுபடக் கூடாது நீங்கள்?! ஏன் ஈடுபடக் கூடாது நீங்கள்?! சிந்தியுங்கள்! சந்தியுங்கள்! சிந்தியுங்கள்! சந்தியுங்கள்!! சிந்தியுங்கள்! சந்தியுங்கள்!!!

<u>**குறிப்பு:-**</u> இன்றைய நிலேயில் இந்துமதத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களே எதிர்த்துப் போராட தங்களேப் போன்ற வீரதீரத் தளபதிகள் தேவைதான், தேவைதான், தேவைதான். ஆனுல், வெகு விரைவில் இந்துமதம் முழுமையாகத் தன்னேத் தற்காத்துக் கொள்ள எல்லாவகையான தற்காப்புத் தகுதிகளேயும் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்காகவே பாடுபடத் தாங்கள் சிந்திக்க வேண்டும், சிந்திக்க வேண்டும், சிந்திக்க வேண்டும், சிந்தித்தேயாக வேண்டும். <u>**இல்லாவிட்டால்** காலப்போக்கில் தங்களேப் போன்ற வீரத் தளபதிகள் இல்லாமல் போகின்ற போது; இந்துமதம் எதிரிகளாலும், துரோகிகளாலும், விரோதிகளாலும் சிதைத்துச் சீரழிக்கப் பட நேரிட்டு விடும்.</u>

11) பேராற்றலும், போராற்றலும் உடைய தாங்கள் மேலே குறிப்பிட்ட பேருண்மை பற்றிப் பொறுப்போடும், பொறுமையோடும், நிதானத்தோடும் நீள நினேத்து, ஆழச் சிந்தியுங்கள். உங்களின் மூலம் இந்துவேதம் வளரட்டும்! வளவளர்ச்சி பெறட்டும். இந்துமதம் மறுமலர்ச்சியும், செழிச்சியும், ஆட்சிமீட்சியும் பெறட்டும்.

12) மாவீரரே! வீரத் தளபதியே! இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் துரோகிகளும், விரோதிகளும், கைக்கூலிகளும், போலிகளும், கங்காணிகளும், அந்நிய எதிரிகளும் சூழ்ச்சிகளாலும், சதிகளாலும் உருவாக்கி விட்ட வீழ்ச்சி நிலைகளும், தாழ்ச்சி நிலைகளும், இகழ்ச்சி நிலைகளும், அயர்ச்சி நிலைகளும், தளர்ச்சி நிலைகளும் தூரோடு வேரோடு பறித்து எறியப்படட்டும், பறித்து எறியப்படட்டும், பறித்து எறியப்படட்டும். இதை உணர்ந்து செயல்படுத்துங்கள்! இதை உணர்ந்து செயல்படுத்துங்கள்! இதை உணர்ந்து செயல்படுத்துங்கள்!

13) மாவீரரே! வீரத் தளபதியே! இந்துவேதமும், இந்துமதமும் பிழைக்க, தழைக்க, உழைக்க அழைக்கிறோம் உங்களை! அழைக்கிறோம் உங்களை! அழைக்கிறோம் உங்களை! சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!! சிந்தியுங்கள்!!! சந்தியுங்கள்! சந்தியுங்கள்!! சந்தியுங்கள்!!!

14) ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ என்பது (இ.ம.இ. I.M.I.) முழுக்க முழுக்க இந்துமதத்தின் வரலாறு, வாழ்வியல் நடைமுறைகள், ஒழுகலாறுகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்கியல்கள், சாத்தர சாத்திர சாத்திறச் சம்பிறதாயங்கள், அருளாளர்களின் வரலாறுகள், போதனைகள், சாதனைகள், கோயில்களின் வகைகள், வரலாறுகள், பயன்படும் முறைகள், பயன்படும் நெறிகள், திருவிழாக்கள், திருநாள்கள், கோயில் கருவறை ஊழியக்காரர்கள் 48 வகையினர், கோயில் ஊழியர்கள் 64 வகையினர், 48 வகை மதத் தலைவர்கள், அருட்கலைஞர்கள், பதினெண்மேல் கணக்கு நூல்கள், பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள், பதினெண்மையக் கணக்கு நூல்கள், சமயக்குரவர் நால்வர் நிலை, சந்தானக்குரவர் நால்வர் நிலை, மெய்யான புராண இதிகாசங்கள், பூசைமொழிகள், பூசைவிதிகள், பூசை தத்துவங்கள், பூசை சித்தாந்தங்கள், தவம், ஞானம், மந்திரித்தல், ... முதலியவை பற்றிய மெய்யான கருத்துக்களையும், செய்திகளையும், செயல் நெறிமுறைகளையும்

ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. **(இ.ம.இ.)**

15) இப்படியாக இ.ம.இ. மாற்று மதங்களை விமரிசிக்காமல் இந்துமதத்தில் காலப் போக்கில் புகுந்துவிட்ட விபரீதக் கற்பனைகளை, மூடநம்பிக்கைகளை, கண்மூடிப் பழக்க வழக்கங்களை, அன்னிய மொழி ஆட்சிகளை, அன்னிய மொழிப் புராண இதிகாசங்களை, அன்னிய வர்ணாசிரம தர்மங்களை, அன்னிய சனாதனப் போக்குகளை, அன்னிய வேத சாத்திர சம்பிறதாயங்களை, பிறமண்ணினரின் தவறான சுரண்டல் போக்குகளை, சாதிப் பிரிவினை வாதங்களை, ... தனித்தனியாக எடுத்து விளக்கி நாகரிகமாக விமரிசனம் செய்தால்தான் ஏதாவது பயன் ஏற்படும்! ஏதாவது பயன் ஏற்படும்!! ஏதாவது பயன் ஏற்படும்!!! என்பதை உணர்ந்து இந்து மறுமலர்ச்சி இயக்கம் செயல்படுகிறது. அதாவது, ஒவ்வோர் இந்துவுக்கும் தன்னுடைய

- ‘இந்து மதம் ஒரு சமூக விஞ்ஞானம்’,
- ‘இந்து மதம்; இம்மண்ணுலகில் தோன்றக் கூடிய எல்லா பயிரினங்களும், உயிரினங்களும் தங்கள் தங்களுடைய இயற்கையான சூழ்நிலைகளுக்கும், வசதி வாய்ப்புகளுக்கும் ஏற்ப தனித்த உரிமையும், பெருமையும் உடைய விடுதலை வாழ்வு வாழ வேண்டும் என்பதற்குரிய விதியை வகுத்தளிக்கிறது’;
- ‘இந்து மதம்; ஒரு நாட்டில் தோன்றிய மதம் அந்த நாட்டிற்குள் மட்டுமே வாழ வேண்டும்’;

என்ற கொள்கையையும், குறிக்கோளையும் வலியுறுத்திக் காட்டுகிறது.

இதற்காகவே இந்து வேதத்தின் 1999ஆம் கருத்து:

1) ‘ஒரு மொழிக்குரிய கடவுள்கள் அந்த மொழிக்குரியவர்களுக்கு மட்டுமே உதவுவார்கள்’;

2) ‘ஓர் இனத்துக்குரிய கடவுள்கள் அந்த இனத்தவர்களுக்கு மட்டுமே உதவுவார்கள்’;

3) ‘ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள் அந்த நாட்டவர்களுக்கு மட்டுமே உதவுவார்கள்’

... என்று அழுத்தந்திருத்தமாக, ஆணித்தரமாகக் கூறுகிறது. இக்கருத்துக்களைச் சிந்தித்துப் பாருங்கள். அதாவது பிறர் மனம் புண்படும் என்பதற்காக இந்துவேதம் ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள் இன்னொரு நாட்டவருக்கு உதவ மாட்டார்கள் என்று கூறவில்லை. இந்த அளவுக்குப் பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் கூறியுள்ள இந்துவேதம் மிகுந்த நாகரிக மேம்பாடு உடையது.

16) இப்படி மிகுந்த மேம்பாடு உடைய பண்பாட்டையும், நாகரிகத்தையும் உடைய தமிழர்களின் இந்து வேதத்தைப் பிறமண்ணினரான பிருமணர்களின் ஹிந்து மதத்துக்குரிய சமசுக்கிருத மொழியில் உள்ள வேதத்திலிருந்து தனித்துப் பிரித்து வேறுபடுத்தி உணர்ந்தும் உணர்த்தியும் செயல்பட்டால்தான் இந்த உலகின் முதல் வேதமான தமிழில் உள்ள இந்து வேதத்தைக் காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்!! காப்பாற்ற முடியும்!!!

17)

(i) ‘தமிழில் உள்ள இந்து வேதம்தான் இந்த உலகின் முதல் வேதம்’,

(ii) ‘தமிழில் உள்ள இந்து வேதம்தான் இந்த உலகின் மூலவேதம்’,

(iii) ‘தமிழில் உள்ள இந்து வேதம்தான் இந்த உலகுக்குரிய பொது வேதம்’,

(iv) ‘தமிழில் உள்ள இந்து வேதம்தான் இந்த உலகில் தோன்றக் கூடிய எல்லா மொழிகளுக்கும், இனங்களுக்கும், நாடுகளுக்கும் உரிய பொது வேதமாக அறிவிக்கப்பட்டுள்ள வேதம்’;

(v) ‘தமிழில் உள்ள இந்த இந்து வேதம்தான் காலங்கள் தோறும் கடவுள்களாலேயே எழுதித் தரப்படுகின்ற வேதம்’;

(vi) ‘தமிழில் உள்ள இந்து வேதத்தில்தான் கோடிக்கணக்கான கடவுள்களைப் பற்றியும், அந்தக் கடவுள்களின் வாழ்வியல்களைப் பற்றியும், வடிவமைப்புக்களைப் பற்றியும் விளக்கங்கள் இருக்கின்றன’;

(vii) ‘தமிழில் உள்ள இந்து வேதத்தில்தான் கடவுள்களுக்கு பிறப்பு உண்டு, இறப்பு உண்டு, பிறப்பிறப்பற்ற பெருநிலையும் உண்டு என்பது பற்றியும், கடவுள்களின் ஆண்கள், பெண்கள், அலிகள் என்ற மூன்று வகையினர்கள் உண்டு என்பது பற்றியும் மிகமிகத் தெளிவான திட்டவட்டமான செய்திகள் இருக்கின்றன’;

(viii) ‘தமிழில் உள்ள இந்து வேதத்தில்தான் கடவுள்கள் அடிக்கடி மனிதர்களைச் சந்திப்பது பற்றியும், மனிதர்கள் அடிக்கடி கடவுள்களைச் சந்திப்பது பற்றியும் மிகமிகத் தெளிவான திட்டவட்டமான செய்திகள் இருக்கின்றன’;

(ix) ‘தமிழில் உள்ள இந்து வேதத்தில்தான் கடவுள்கள் மனிதர்களாகப் பிறப்பெடுப்பது பற்றியும், மனிதர்கள் கடவுள்களாக மாறுவது பற்றியும், மிகமிகத் தெளிவான திட்டவட்டமான செய்திகள் இருக்கின்றன’;

(x) ‘தமிழில் உள்ள இந்து வேதத்தில்தான் மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழிகளும், பூசைவிதிகளும் இருக்கின்றன’;

(xi) ‘தமிழில் உள்ள இந்து வேதத்தில்தான் கடவுள்களுக்கு குறிப்பிட்ட விருப்பு வெறுப்புக்கள் உண்டு, குறிப்பிட்ட மொழிப்பற்று உண்டு, குறிப்பிட்ட இனப்பற்று உண்டு, குறிப்பிட்ட நாட்டுப்பற்று உண்டு, கடவுளின் அருளாற்றலுக்கு குறிப்பிட்ட அளவு உண்டு, குறிப்பிட்ட எல்லை உண்டு என்ற சிறப்புச் செய்திகள் மிகமிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் இருக்கின்றன’;

(xii) ‘தமிழில் உள்ள இந்து வேதத்தில்தான் குறிப்பிட்ட மொழிகளுக்குரிய கடவுள்களுக்கு வேற்று மொழி தெரியாது, குறிப்பிட்ட இனங்களுக்குரிய கடவுள்களுக்கு வேற்று இனத்தவர்களைப் புரியாது, குறிப்பிட்ட நாடுகளுக்குரிய கடவுள்கள் வேற்று நாடுகளுக்குப் போக மாட்டார்கள் என்ற வேறுபாடுகள் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் விளக்கப்படுகின்றன’;

... **இப்படிப் பட்டியலிட்டுக் கொண்டே போனால் இந்து வேதத்தின் கருத்து வளமும், ஆழமும், விரிவும் பரந்து விரிந்து கொண்டே போகும்**. எனவே, இந்த இந்து வேதத்தைப் பரப்பிட காத்திட வளர்த்திட பயன்படுத்திட உங்களைப் போன்றோரின் துணை தேவை, தேவை, தேவை என்ற அறிவிப்பை இந்துவேத நாயகமாகவும், இந்துவேத பீடமாகவும் இருக்கின்ற நமது பதினெண்சித்தர் மடாதிபதி அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அறிவிப்பு வேண்டுகோளாக வழங்குகிறார். இதைப் புரிந்தும் புரியவைத்தும், உணர்ந்தும் உணர வைத்தும் செயல்பட வருக! செயல்பட வருக! செயல்பட வருக! இதற்காக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை வளர்க்க தாங்களும் மற்றவர்களும் முன்வர வேண்டும் என்பது தெளிவாகிறது.

18) இந்து முன்னேற்றக் கழகம் என்பது நம் நாட்டில் உள்ள மற்ற மதத்தவர்கள் தங்களுடைய மதத்தவர்களை ஒன்று திரட்டி ஒற்றுமைப் படுத்தி தங்கள் தங்கள் மதங்களில், அந்தந்த வட்டாரக் கோயில்களில் ஒற்றுமைப்படுத்திச் சமுதாய அளவிலும், அரசியல் அளவிலும் தங்களுக்கென்று தனித்த வலிமையான செல்வாக்குகளை நிலைநாட்டுவது போல; இந்துக்களும் அந்தந்த வட்டாரங்களில் உள்ள கோயில்களில் ஒன்றுதிரண்டு ஒற்றுமைப்பட்டு ஒருமைப்பாட்டுடன் சமுதாய நிகழ்ச்சிகளிலும், அரசியல் நிகழ்ச்சிகளிலும் தனித்த வலிமையை வெளிப்படுத்தி வளமான வாழ்வு பெற வேண்டும் என்று பாடுபடக் கூடிய ஒரு கழகமாகும்.

அதாவது, இந்து மதத்துக்கென உள்ள RSS, VHP, BJP, இந்து முன்னணி, ஆதிபராசத்தி வார வழிபாட்டு மன்றம், புட்டபர்த்தி சாயிபாபா பசனை மன்றம், நாடு முழுதும் ஆங்காங்கு உள்ள அருள்நெறிச் சபையினர், திருநெறிச் சபையினர், பாதயாத்திரைக் குழுக்கள், பொதுத் தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், சாமியார் சபைகள், ... முதலிய அனைத்து வகையான அமைப்புக்களும், நிறுவனங்களும், நிர்வாகங்களும் ... தமிழ் நாட்டுக்குள் மட்டுமாவது! ஒன்றாகக் கலந்து ஒருமைப்பட்டு விட வேண்டும். ஒன்றாகக் கலந்து ஒருமைப்பட்டு விட வேண்டும், ஒன்றாகக் கலந்து ஒருமைப்பட்டு விட வேண்டும், ஒன்றாகக் கலந்து ஒருமைப்பட்டேயாக வேண்டும், ஒன்றாகக் கலந்து ஒருமைப்பட்டேயாக வேண்டும், ஒன்றாகக் கலந்து ஒருமைப்பட்டேயாக வேண்டும். இல்லாவிட்டால் இந்துமதத்துக்கு வருங்காலம் இல்லை, வருங்காலம் இல்லை, வருங்காலம் இல்லை.

19) மேற்படி பேருண்மையினைப் புரிந்துதான் மற்ற மடாதிபதிகள் எல்லாம் மடத்தின் எல்லைகளுக்குள்ளும், தங்களின் இனத்தின் எல்லைகளுக்குள்ளும், தங்களின் மொழிகளின் எல்லைகளுக்குள்ளும்

தங்களுடைய எல்லாச் செயல்நிலைகளையும் சுருக்கிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே! இந்து வேத மதமான இந்து மதத்தின் தலைமை மடமாகவும், குவலய குருபீடமாகவும், இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியாராகவும், இந்து வேத நாயகமாகவும், இந்து மதத் தந்தையாகவும், நிறை யக்ஞராகவும், கருவறை மூலவர்களின் அம்மையப்பராகவும், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாகவும், குருமகா சன்னிதானமாகவும், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறாராகவும், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகவும் இன்று வாழும் நமது குருதேவர் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்; சிங்கம் தனது குகையை விட்டு வெளிக் கிளம்பியது போல் தமது திரு மடத்தை விட்டு ஊர் ஊராக, கிராமம் கிராமமாக, சின்னஞ்சிறு குக்கிராமங்கள் முதல் பட்டிதொட்டிகள் வரை எல்லா இடங்களுக்கும் இரவு பகல் என்று பாராமல் சுற்றுப்பயணம் செய்கிறார்.

இவர் நட்ட நடுநிசியிலும், கொட்டும் பனியிலும் வெட்டவெளிகளில் கூட்டங்கள் போட்டு ஏழை எளிய பாட்டாளி பாமர மக்களை எல்லாம் ஒன்று திரட்டி, அனைவருக்கும் **இட்டும் தொட்டும் சுட்டியும்** உடம்பில் அருளூறு அச்சரங்களை, தெய்வீகச் சக்கரங்களை எழுதியும்; மயில்பீலியாலும் இலிங்கக் கொடியாலும் (***இலிங்கம், சத்திலிங்கம், சிவலிங்கம் எனும் மூன்று வகைப்பட்ட ஆற்றல்களுக்கும், ஒருங்கிணைந்த இலிங்கக் கொடி குருதேவரின் கையில் எப்போதும் இருப்பது***) திரிசூலத்தாலும் வாழ்த்தியும் ‘அருளை மருந்தாகவும் விருந்தாகவும் வழங்கும் பணி’ யினைச் செய்து வருகிறார்; பாழடைந்த கோயில்களுக்கு எல்லாம் புத்துயிர்ப்பு ஊட்டி வருகிறார்.

இவற்றிற்கெல்லாம் மேலாக; இந்து வேதக் கொள்கைகளிலும், நடைமுறைகளிலும் சிறப்பாக உள்ள **‘குடும்ப ஆண்டவர்கள்’** (= மாண்டவர்கள்), **‘குலதெய்வங்கள்’**, **‘கிராம தேவதைகள்’** (**ஊர்க் காவல்**

**தேவர்கள், தேவதைகள்**), **'நாட்டுக் கடவுள்கள்'** எனும் நான்கு வகைப்பட்ட அருளூற்றுக்களையும் எல்லாத் தர, திர, திறப்பட்ட மக்களையும் பயன்படுத்தி நலம் அடைந்திட முடிகயிறு, தாயத்து, சக்கரம், உருத்திராக்கம் முதலியவைகளை வாரி வாரி வழங்கி **அருட்கொடை வள்ளலாகத் திகழ்கிறார்**.

எனவேதான், இவர் தம் காலத்தில் **உடனடியாகவும், அவசர அவசியமாகவும்** தமிழகத்துக்குள் இந்துவேதத்தின் பெயராலும், இந்துமதத்தின் பெயராலும், கலை இலக்கியங்களின் பெயராலும், சமுதாயத்தின் பெயராலும், அரசியலின் பெயராலும், இன்றைக்கு நாட்டிலுள்ள அனைத்து வகைப்பட்ட கட்சிகளும், கழகங்களும், இயக்கங்களும், மன்றங்களும், திருச்சபைகளும், சங்கங்களும் ஒன்றோடு ஒன்று போட்டியிடுவதை விட்டுவிட்டு; இந்துவேதத்தின் பெயராலோ இந்துமதத்தின் பெயராலோ ஒன்று திரட்டப்பட்டு ஒற்றுமையாக்கப்படல் வேண்டும், ஒன்று திரட்டப்பட்டு ஒற்றுமையாக்கப்படல் வேண்டும், ஒன்று திரட்டப்பட்டு ஒற்றுமையாக்கப்படல் வேண்டும் என்ற மாபெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

20) இப்படி நமது இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியக் குருபீடம், குருதேவர், இந்துவேத நாயகம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள முயற்சி, ஈடுபட்டுள்ள ஈடுபாடு எள்முனையளவு கூடத் தன்னலமோ, புகழ் வெறியோ, பொருள் வெறியோ, பதவி வெறியோ, பண வெறியோ இல்லாமல் தூய்மை உற்று, வாய்மை பெற்றுத் திகழ்வதைத் தங்களைப் போன்றவர் புரிந்து உணர்ந்து செயல்பட முன்வர வேண்டும், புரிந்து உணர்ந்து செயல்பட முன்வர வேண்டும், புரிந்து உணர்ந்து செயல்பட முன்வர வேண்டும்.

21) பேரன்புடையீர்! நமது குருதேவர் அந்தணர் அண்ணல், ஞாஞுச்சாரியார் அவர்கள் குமரி முதல் இமயம் வரை பரவிக் கிடக்கின்ற இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் காப்பாற்றுவதற்காகவும், தமிழ் நாட்டில் உள்ள மக்களே மட்டும் ஒன்றுதிரட்ட முற்பட்டிருப்பதைத் தவருக எண்ண வேண்டாம். ஏனென்ருல், இந்தியாவிற்கே, உலகிற்கே அருட்பயிர்களைத் தயாரிப்பதற்குரிய, விளேவிப்பதற்குரிய நாற்றங்கால்களாகவும், நாற்றுப் பண்ணைகளாகவும், விதைப் பண்ணைகளாகவும் தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும்தான் இருக்கின்றன. தமிழ்மொழிதான் கடவுள் மொழியாக, தெய்வ மொழியாக, தேவ மொழியாக, அருளூறு அமுத மொழியாக விளங்குகின்றது; தமிழ்நாடுதான் இந்த உலகின் முதல் வேதமும், மூல மதமுமான இந்துவேதமும், இந்துமதமும் பிறந்த இடமாக, வாழுகின்ற இடமாக, வாழக் கூடிய அல்லது வாழப் போகின்ற இடமாக இருக்கின்றது என்று அண்டபேரண்ட அருளாட்சி நிகழ்த்தும் பதினெண்சித்தர்கள் கூறுகின்ருர்கள்.

இக்**<u>காரணங்களின் காரணமாகத்தான் நமது குருதேவர் இந்தியா முழுவதும் ஆற்ற வேண்டிய அருட்பணிகளுக்கு தமிழ்நாட்டு மக்களேயே முதலில் ஒன்றுதிரட்டி ஒற்றுமைப்படுத்தி ஒருமித்த இந்து வேத உணர்வையும், இந்து மத உணர்வையும் பெற்றிடுமாறு செய்கிருர். இதற்குத் தங்களேப் போன்ருேர்</u>** எல்லாவகையான ஒத்துழைப்புக்களேயும், உதவிகளேயும், ஏந்துகளேயும், பாதுகாப்புக்களேயும், வசதி வாய்ப்புக்களேயும் வழங்க வேண்டுமென்று தொடர்ந்து **<u>‘அறிவிப்பு அழைப்பு வேண்டுகோள்’</u>** வழங்கப்படுகிறது, வழங்கப்படுகிறது, வழங்கப் படுகிறது.

22) வாருங்கள், வாருங்கள், வாருங்கள். நம் நாட்டில் இந்து வேதத்தின் பெயராலும், இந்து மதத்தின் பெயராலும் உள்ள அனைத்து வகைப்பட்ட நிறுவன நிர்வாகங்களேயும் தனித்தனியாகவோ

அல்லது ஒன்று கூட்டியோ கருத்துப் பரிமாற்றச் சிந்தனை அரங்கம் நிகழ்த்துவோம்.

"சிந்திப்போம்! செயல்படுவோம்!! ஒன்றுபடுவோம்!!!"
"சந்திப்போம்! பயிற்சி செய்வோம்!! உயர்ச்சி பெறுவோம்!!!"
"முயற்சி செய்வோம்! ஒன்றுதிரள்வோம்!! ஒற்றுமைப்படுவோம்!!!"
"நாளை நமதே! வெற்றி நமதே!"
"இந்துவேத வாய்மையே வெல்லும்!
இந்துமதத் தூய்மையே வெல்லும்"

தாங்களும் தங்கள் நண்பர்களும் இ.ம.இ.யிலும், இ.மு.க.விலும் பங்கு பெறுவது எப்போது?!

**- பதினெண்சித்தர் மடம், பீடம்,**
**14-3-1992.**

அன்பு கூர்ந்து இந்த அஞ்சலைப் புத்தகமாக அச்சிட்டு வெளியிடுங்கள்.

**//உண்மை நகல்//**
**// இதன் மூல நகல்: சித்தரடியார் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

# செயல்நலம் பாராட்டுத் திருவோலை

தலைமைப்பீடம்,
22 - 4 - 91.

## அருளாணை பெற்ற குருவாணை

**"இந்துவேதத்தின் மூலம்தான் சாதி மத வேறுபாடற்ற சமுதாய ஒற்றுமையையும், சமத்துவத்தையும் உருவாக்க முடியும்"** - என்ற குருபாரம்பரிய வாசகப்படி இந்தப் போர்க்கால போர்க்கோல சூழலில் இந்துவேதம் விரைந்தும், விரிந்தும் பரப்பப்பட்டேயாக வேண்டும். இதனுடன் இணைந்தே அருளை அநுபவப் பொருளாக வழங்கும் அ.வி.தி. பணிகள் நடக்க வேண்டும். எனவே, இந்த அஞ்சலை சீ.மணிக்கு மட்டும் எழுதப்பட்டதாக எண்ணமல் ஒவ்வொருவரும் தங்களுக்கு எழுதப்பட்டதாக எண்ணி ஏற்றுப் படித்துப் புரிந்து செயல்பட்டாக வேண்டும். மேலும், இதிலுள்ள கருத்துக்களையும், செயல்திட்டங்களையும் ஒவ்வொருவரும் தங்களுடைய வட்டாரத்தில் உள்ள மற்ற சன்னிதானங்களை அழைத்து கலந்து பேசி அனைவரின் பொருளாதார வசதிகளையும், உடலுழைப்பு நிலைகளையும், அந்தந்த வட்டாரத்தின் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டே செயல்திட்டங்களை வகுக்க வேண்டும். இப்படி அந்தந்த மாவட்டங்களிலும் கூடுமானல் அந்தந்த மண்டலங்களிலும் வாழுகின்ற நமது சன்னிதானங்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டு 'ஊர் கூடித்தான் தேர் இழுக்க வேண்டும்' என்ற மூதுரைக்கு ஏற்ப அனைவரும் ஒன்றுபட்டே செயல்பட வேண்டும்.

<u>குறிப்பு</u>:- நாம் இன்றுள்ள இந்துமதத்தையோ, ஹிந்துமதத்தையோ கண்மூடித்தனமாகப் பரப்பவோ வளர்க்கவோ முயலவில்லை என்பதை <u>உணர்ந்தும் உணர்த்தியும்</u> செயல்பட்டாக வேண்டும். அடுத்தடுத்த அஞ்சல்கள் வரும். உங்களுடைய பதில்களும் உடனுக்குடன் தேவை.

ஞானச்சாரியார்
இந்துவேதநாயகம்
இந்துமதத் தந்தை
இந்துவேத பீடம்

அன்பு
சித்தர்

**குருவாணை**
**22-4-91**

--------------------------------------------------------

தலைமைப்பீடம்,
அம்பத்தூர்,
21-04-91.

அருள்மிகு கிழக்கு மண்டல சிறப்பு நிர்வாகக் குழு அமைப்பாளரும், இந்துவேத மாநாட்டு அமைப்புச் செயற்குழு உறுப்பினரும், அருள்மிகு தேவி கோமதியம்மன் சன்னிதானமும், கபாலீசுவரி சன்னிதானமுமான சீ.மணி அவர்களுக்கு,

ஞானச்சாரியார், இந்துவேத பீடம், பதினெண்சித்தர் மடம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் விடுத்துக் கொள்ளும் **<u>செயல்நலம் பாராட்டுத் திருவோலை:</u>**

1. தாங்கள் மிகமிகச் சிறப்பாக அண்மையில் கிழக்கு மண்டலம் முழுவதும் செயல்பட்டு வருவதை முழுமையாகப் பாராட்டுகிறோம்.

தங்களைத் தவிர வேறு யாராக இருந்தாலும் மாயவரம், சமயபுரம், விரகாலூர், திருமானூர், தஞ்சை வட்டாரங்களில் செயல்பட்டிருக்க முடியாது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் யாம் உங்களை அங்கு அனுப்பினோம்.

2. தாங்கள் அதிகமாகச் சுற்றுப்பயணம் செய்யத் தேவையில்லை. ஏற்கனவே சொல்லியது போல் மாயவரத்திலோ, திருமானூரிலோ ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு எல்லோரையும் வரச்சொல்லி அ.வி.தி. பணிகளின் மூலமும், நமது புத்தகங்கள் அறிக்கைகள் மூலமும், இந்து வேத ஒலிப்பேழைகளின் மூலமும் இயக்கத்திற்கு உறுப்பினர்களைச் சேருங்கள். ரூபாய் 7, 13, 25 என்று எந்த அளவு சந்தா கொடுத்தாலும் உறுப்பினராக்கி விடுங்கள். பூசைமொழிப் பயன்களைக் கருதித்தான், மேலும் பதினெண்சித்தர் மடம் வாழ்த்தித் தருவதால்தான் இந்தப் புத்தகத்தின் விலை ரூபாய் இருபது என்று நினைக்க வேண்டாம். இது மந்திரித்த சக்கரம் தாயத்து போன்றது. எனவேதான் ரூபாய் இருபது என்று கூறுங்கள்.

திருச்சபையில் உறுப்பினராகச் சேர்ந்தால்தான் பதினெண்சித்தர் மடத்தில் பூசைகள் செய்யும் போதும், குருதேவர் யாகம் செய்யும் போதும் தங்களுக்கு அருட்பாதுகாப்பு கிடைக்கும் என்று கூறி உறுப்பினரைச் சேருங்கள். உங்களிடம் ஏற்கனவே பிளாக் தந்திருப்பதால், தேவையானல் மீண்டும் ஓர் ஆயிரம் உறுப்பினர் அட்டை அச்சிட்டுக் கொள்ளுங்கள். ஏனென்றல், மூன்று மாத சந்தாதாரர்களுக்குக் கூட உடனடியாக உறுப்பினர் அட்டை தந்து விடுங்கள். ஆனல், உடனுக்குடன் அவரது முழு முகவரியையும் வாங்கி விடுங்கள். நம்மிடம் முகவரிகள் நிறைய சேர்ந்து விட வேண்டும். அப்பொழுதுதான் நிறைய பேருக்குச் செய்திகள் தெரிவிக்க

முடியும். குருதேவர் வருகை அவர்களுக்கு தெரிவித்து வரச் சொல்ல முடியும்.

<u>குறிப்பு:-</u> நமது இந்து வேத மாநாடு கிழக்கு மண்டலத்தில் நடக்கும் போது நம்மிடம் ஆயிரம் உறுப்பினர்கள் இருந்து அழைப்பு அனுப்பினால் அப்பொழுதுதான் இருநூறு உறுப்பினர்களாவது, ஐநூறு உறுப்பினர்களாவது வருகை தருவார்கள். எனவே, உறுப்பினர்களை அதிகமாக எப்படியாவது சேருங்கள்.

3. அருட்கணிப்புக்கு வருபவர்களையும் மூன்று மாதச் சந்தாவாவது பெற்று உறுப்பினராக்கி உறுப்பினர் அட்டை தந்து விடுங்கள். கூடுமானவரை பூசைமொழிப் புத்தகத்தையும் தந்து விடுங்கள். அருட்கணிப்புக்கென ரூ.25 முதல் ரூ.48/- வரை வாங்குங்கள். வசதியில்லாதவர்களிடம் இதற்குக் குறைத்துக் கூட வாங்குங்கள். எப்படியும் உறுப்பினர்களைச் சேருங்கள்.

4. நாம் உருத்திராட்ச மாலையை பலருக்கும் கொடுத்தால்தான் அருளாளர்களை உருவாக்க முடியும். எனவே, உருத்திராட்ச மாலை ரூ.27/-, ரூ.32/-, ரூ.36/-, ரூ.48/- என்று 4 விலைகளில் வேண்டுபவர்களின் வசதிப்படி தாருங்கள். சிலருக்கு இனாமாகவே கூடக் கொடுக்கலாம். தாங்கள் விருப்பப்படி முடிவெடுத்துச் செயல்படலாம். இதேபோல் காசிக்கயிறும், பளபளப்பு (சிகினா) இல்லாக் கயிற்றில் எட்டு முடிச்சு போட்டதும் ரூபாய் ஒன்றுக்கு கொடுக்கலாம். சிகினா கயிற்றில் எட்டு முடிச்சு போட்டது ரூபாய் இரண்டு; மூலிகை துளசி போன்றது கட்டிய காசிக்கயிறு விலை ரூ.3/- முதல் ரூ.5/-; சாதாரண தாயத்து ரூ.10/- ரூ.11¼; ‘உங்கள் விருப்பம் போல் இருக்கின்ற காசைக் கொடுங்கள், மீதியைப் பிறகு கொடுங்கள்’ என்று ரூ.5க்கு மேல் பெற்றுக் கொண்டு தாயத்து தாருங்கள். இப்படி நாம் செயல்பட்டால்தான் மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக்கி

மருந்தாகவும், விருந்தாகவும் வழங்குகின்ற பதினெண்சித்தர்களின் செயல்திட்டம் வெற்றி பெறும்.

5. எங்காவது இரண்டு மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்து (தாங்கள் அங்கிருப்பதால்) வாராவாரம் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு மூன்று நாட்களில் பதினெண்சித்தர் மடம் கூட்டு வழிபாடு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து கோயில் பூசாறி, குருக்களிடம் சொல்லி முழு முழுக்காட்டு (அபிஷேகம்) அல்லது அருட்சினை கருவறையில் செய்து; சுண்டல், திருநீறு, குங்குமம் வழங்கி மக்களிடம் கருத்துக்களைக் கூறி இந்து வேதத்தின் மூலம் இந்துமத மறுமலர்ச்சிக்கும், ஆட்சிமீட்சிக்கும் பாடுபட வேண்டும். இந்த செயல்திட்டத்தை எல்லா இடங்களுக்கும் தெரிவித்து செயல்படச் செய்யுங்கள்.

6. **இந்து வேத மாநாடு** என்ற சுவரொட்டி (wall poster) சில ஆயிரம் அச்சடித்து, (தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், காரைக்குடி மாவட்டம் என்று கிழக்கு மண்டலத்தில்) இந்து வேத மாநாட்டு நிதி வசூலிப்பு சிறப்புக் கூட்டங்கள் என்று மூன்று மாவட்டங்களிலும் பல இடங்களில் போட்டு கூட்டம் நடத்துவதற்கு ஓரிரு நாட்கள் முன்னால் கடை வீதியில் உண்டியல் குலுக்கி நிதி வசூல் செய்தும், மேடையில் சொற்பொழிவு செய்தும், அங்குள்ள கோயில்களில் நம்மவர்கள் தங்கி அருட்கணிப்பு கணித்தும், ஊர் ஊராக, கிராமம் கிராமமாக நமது சன்னிதானங்கள் வீடு வீடாகச் சென்று உண்டியல் குலுக்கி நிதி வசூல் செய்து இந்து வேத மாநாட்டை கூட்டியே தீர வேண்டும். முதல் மாநாட்டை தஞ்சைத் தரணியில் தாத்தா கோயிலுக்கு அருகிலேயே கூட்ட வேண்டும்.

இந்த முதல் மாநாட்டு முயற்சிதான் மிகவும் சிரமமானதாகத் தெரியும். ஆங்காங்குள்ள பத்தர்களில் பெருஞ்செல்வந்தர்களாக உள்ளவர்களை நேரில் சந்தித்து இந்து மத மாநாட்டிற்காக உதவி

செய்யுமாறு வேண்டினுல் கட்டாயம் உதவி செய்வார்கள். இதற்காக ஒவ்வொரு கோயிலிலும் உள்ள கோயில் குருக்கள், பூசாறி, ஓதுவார், கோயிலுக்கு வரக்கூடிய மெய்யன்பர்கள் முதலியவர்களிடம் அந்தந்த கோயில் சார்ந்த வட்டாரங்களிலும், ஊர்களிலும் இந்து மதத்திற்காக உதவி செய்யக் கூடிய செல்வர்கள் அல்லது நல்ல மனம் உடையவர்கள், கொடையாளர்கள் யார்யார் இருக்கிறுர்கள் என்று விசாரித்தால் கட்டாயமாகப் பத்துப் பதினைந்து பேர்களின் முகவரியாவது கிடைக்கும்.

அப்படிக் கிடைப்பவர்களின் முகவரிக்கு நமது அடியார்கள் இரண்டு மூன்று பேர்களாவது சேர்ந்து சன்னிதான உடையில் மெய்ஞ்ஞானக் கொடி, மயில்பீலி, திரிசூலம் என்று மூன்றுடன் சென்று நமது அறிக்கைகளையும், புத்தகங்களையும், அருளூறு பூசனைப் பொருட்கள் திருநீறு குங்குமம் வழங்கி பதினெண்சித்தர் மடம், தஞ்சைத் தாத்தா, மந்திரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள், நமது அருட்கணிப்புச் செயல்திட்டம், இந்துவேத ஒலிப்பேழை முதலியவைகளையெல்லாம் வழங்குவோமாஞல் கட்டாயமாக யாராக இருந்தாலும் கணிசமான அளவு நன்கொடை தருவார்கள். அவர்களுக்கு இரசீது கொடுத்து வசூல் செய்ய வேண்டும். இதற்காக இந்துவேத மாநாடு நன்கொடை என்று அந்தந்த வட்டாரத்தில் இரசீது புத்தகம் அச்சடித்துக் கொண்டால் சரியே.

இப்படிச் செயல்பட்டால்தான் நான்கு மண்டலங்களிலும் இந்துவேத மாநாட்டை நடத்தி விரைவில் ஒரு மாநில மாநாட்டை நடத்த முடியும். இதன்படி, தாங்களே தங்களுடைய சொல்லாற்றலுக்கேற்ப மாவட்டம் தோறும் இந்துவேத மாநாடு என்று எழுதியனுப்புங்கள். இதன்படி சிறப்புக் கூட்டங்களாவது அந்தந்த மாவட்டங்களில் நடக்கட்டும். அதாவது, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓரிரு ஊர்களில்

இந்துவேத மாநாட்டு நிதி வசூலிப்புக் கூட்டங்கள் குருதேவரை அழைத்தோ அல்லது சிறப்புப் பணியாளர்களை அழைத்தோ நடக்கட்டும்.

7. தாங்கள் தமிழகம் முழுவதும் கூட, இந்து வேத மாநாட்டு அமைப்புச் செயற்குழு உறுப்பினர் என்ற பதவி நிலையில் சுற்றுப்பயணம் செய்ய அநுமதிக்கப் படுகிறீர்கள். இந்த அநுமதியும் அஞ்சலின் கருத்துக்களும் இன்றைய அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவிடமிருந்து, எமது ஐயாவான பெரியகுளம் சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி அவர்களால் தரப்பட்டதாகும். எனவே, இந்த அஞ்சலின் கருத்துக்களைப் பலருக்கும் நகலெடுத்து அனுப்புவதோடு; பலரிடமும் நேரில் அதாவது தங்களை வந்து காணுபவர்களிடமும் கூறுங்கள்.

இனியும் நாம் சாதாரணமாக பால்குட விழாக்களோ, தீச்சட்டித் திருவிழாக்களோ கொண்டாடிக் கொண்டிருப்பதில் பயனில்லை. நம்மவர்கள் எங்கு கூடினாலும் அருகில் உள்ள ஏதேனும் ஒரு கோயிலுக்குக் கூட்டமாகச் சென்று கூட்டு வழிபாடு செய்து இந்து வேதக் கருத்துக்களை எடுத்துக் கூறி சில புதியவர்களையாவது ஒன்றுதிரட்டி அவர்களிடம் நமது மடம், பீடம், இயக்கம், அ.வி.தி. பணி முதலியவை பற்றிக் கூறுவோமானால் சிறுகச் சிறுக எல்லா வட்டாரங்களில் விவரமாகப் பரவிடும், பரவிடும், பரவிடும். இந்தச் செயல்திட்டத்தை எல்லோருமே எல்லா ஊர்களிலும் செயல்படுத்த முற்பட வேண்டும். அப்பொழுதுதான், நாம் கணிசமான வளர்ச்சியை உரிய காலத்தில் பெற்றிட முடியும்.

இதற்காக நம்மவர்கள் எங்குச் சென்றாலும் ஏதேனும் ஓர் இயக்க அடியான் வீட்டில் தங்காமல், அருகிலுள்ள சின்னக் கோயிலிலாவது சாப்பாட்டு நேரம் போக மற்ற நேரங்களில் தங்கியிருந்து உரையாடிக் கொண்டிருப்போமானால் நமது இயக்கம் விரைவில் வளரும். நம்மவர்கள் நாடு முழுவதும் இருக்கிறார்கள். எனவே,

தங்களைப் போன்ற இயக்கக் கொள்கையும், குறிக்கோளும், செயல்திட்டமும் தெரிந்தவர்கள். நாடு முழுவதும் நேரடியாகவோ ஒரு சில பதிலிகளை அனுப்பியோ சுற்றுப்பயணம் செய்திட்டால்தான் நல்லது, நல்லது, நல்லது. இதில் ஊசிமுனையளவு கூட தயக்கமோ, மயக்கமோ, தேக்கமோ, அடக்கமோ, முடக்கமோ, ஒடுக்கமோ, நடுக்கமோ தேவையில்லை, தேவையில்லை, தேவையில்லை, தேவையேயில்லை. துணிந்து செயல்படுக. வெற்றி கிடைக்கும்.

குறிப்பு:-

(அ) தங்கள் கையில் எப்பொழுதும் முடிகயிறு, மூலிகை முடிகயிறு, தாயத்து, திருநீறு, குங்குமம், நமது புத்தகங்கள் இருப்பின் உம்முடைய தேவைக்கும், பதினெண்சித்தர் மடத்திற்கும் தேவையான நிதி கிடைத்துக் கொண்டேயிருக்கும். இதில் ஐயமேயில்லை.

(ஆ) இயக்க வளர்ச்சிக்காகவும், போர்க்கால போர்க்கோல செயல் விரிவாக்கத்திற்காகவும் நமது அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தா அவர்கள் முக்காலக் கணிச்சி என அருட்கணிப்பு கணிப்பதில் வல்லமை பெற்ற வலைச்சேரிபட்டி இராசேசுவரி தன்னுடைய கணவர் பாலுச்சாமியுடனோ அல்லது தனித்தோ, போர்க்கால போர்க்கோல சித்தரடியாராக செவ்வாடையில் ஆங்காங்கே நமது இயக்கத்தவர்கள் அழைப்பதற்கினங்கச் சென்று அருட்கணிப்புக்கள் கணிக்க வேண்டுமென்று அருளாணை விதித்திருக்கிறார்கள்.

அவர்கள் எங்கு சென்றாலும் **பதினெண்சித்தர் மடம், இந்துவேத பீடம், காரனோடை, சென்னை-67** என்ற பேனர் விளம்பரத் திரைச்சீலையின் கீழ் நின்று செயல்படுமாறு பணித்திருக்கிறார். தாங்கள் சேலத்தில் இருப்பதால், நண்பர்களின் உதவியால் மூன்று அல்லது நாலடி அகலமும், 6 அடி நீளமுள்ள மஞ்சள் துணியில் இருபுறமும் நமது மெய்ஞ்ஞானக் கொடியின் படத்தைப் போட்டு நடுவில்

<u>பதினெண்சித்தர் மடம், இந்து வேத பீடம், காரணோடை, சென்னை</u> <u>67</u> என்று சிவப்பு மையில் எழுதி திரைச்சீலை தயாரியுங்கள். இதில், **'பதினெண்சித்தர் மடம்'** என்ற வரி முக்கால் பங்கு இடத்தை அடைக்குமாறு எழுத வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்கை விட சிறிய அளவில்தான் **'இந்து வேத பீடம்'** என்ற வரி எழுதப்படல் வேண்டும். அதை விடச் சிறிது குறைந்த அளவுடையதாக **காரணோடை, சென்னை - 67** என்ற வரி எழுதப்பட வேண்டும்.

<u>இப்படி ஒவ்வொரு வட்டாரத்தாரும் திரைச்சீலை எழுதி வைத்துக் கொண்டு அருட்கணிப்புக் கூறினால்</u> இன்றைய அருளாட்சி நாயகத்தின் அருளாணைப்படி, எல்லாவகைப்பட்ட கோயில்களிலும், கோயில்களற்ற வெட்டவெளியிலும், உலகம் கடந்தும் வாழுகின்ற அனைத்து அருளுலகத்தவர்களும் அருட்கணிப்பு கூறுபவர்களுக்கு உதவி செய்தே தீருவார்கள். அதாவது, அருட்கணிப்பு கூறுபவர்களின் வாக்கிலும், அவர்கள் வழங்குகின்ற அருளூறு பூசனைப் பொருட்களிலும் முழுமையான அருளாற்றல்கள் இருந்தே தீரும், இருந்தே தீரும், இருந்தே தீரும். <u>இந்த அருளாற்றல்கள் மக்களின் தேவைக்கேற்ப மருந்தாகவும், விருந்தாகவும் பயன்பட்டே தீரும், பயன்பட்டே தீரும், பயன்பட்டே தீரும்</u>. எனவே, தாங்கள் முக்காலக் கணிச்சியை அடிக்கடி வரவழைத்து தங்கள் சுற்றுப்பயணத்தில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

<u>சிறப்புக்குறிப்பு</u>:- இந்த முக்கால அருட்கணிச்சி போல அருளாளியாக இருந்து அருட்கணிப்பு கூறக் கூடிய ஆற்றலை 1. வெ.செகதீசன், 2. செகதீசன் கார்த்தியாயினி, 3. சந்திரா நடராசன், 4. சித்தர் தேரையர் லோகநாதன், 5. மல்லிகா தேரையர் லோகநாதன், 7. தேரையர் மகள் கவிதா லோகநாதன், 8. நமது திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம், 9. சீ. மணியாகிய தாங்கள், 10. பழநியாண்டவர் சன்னிதானம்

இராமசாமி, 11. மேட்டுப்பாளையம் வனபத்திரகாளி சன்னிதானம் இராசசேகரன், 12. சித்தரடியாள் சுசீலா நடராசன், 13. அருள்மிகு No. 3 கொமாரபாளையம் அத்தனூர் அம்மன் சன்னிதானம் அர்த்தநாரி, 14. சேலம் செவ்வாய்ப்பேட்டைக் காளி சன்னிதானம் செல்வராசு, 15. காரைக்குடி விண்வெளி தேவமோகினி சன்னிதானம் பூபதி, 16. அகத்தியர் சன்னிதானம் மு.இராமானுசதாசு, 17. அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் அழ. சோலையழகன், 18. அருள்மிகு சேலம் செவ்வாய்பேட்டை காளியம்மன் சன்னிதானம் செல்வமணி சோலையழகன், 19. அருள்மிகு பச்சைமலை படபத்திரகாளி சன்னிதானம் இரா.சீனிவாசன், 20. அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் கு.பாபு (மதுரை), 21. அருள்மிகு அகத்தியர் திருத்தோன்றல் தெ.வேல்முருகன், 22. அருள்மிகு உறையூர் வெற்றிவேல் தடக்கைக்காளி சன்னிதானம் த. செயக்குமார், 23. அருள்மிகு அருட்சேனைத் தளபதி கு. இரவிமணி, 24. அருள்மிகு கடோத்கசன் திருத்தோன்றல் கும்மிடிப்பூண்டி சுப்பிரமணியம், 25. அருள்மிகு மாங்காடு காமாட்சியம்மன் சன்னிதானம் சித்தரடியார் க.இராசேந்திரன், 26. அருள்மிகு ஆலவாய் மாமூதூர் மதுரைத் தத்தனேரி சுடலை பத்தர, பத்திர, பத்திறகாளி சன்னிதானம் ச. துரைராசன், 27. சமயக்குரவர் நால்வர் சன்னிதானம் த. கேசவன், 28. அருள்மிகு பதினெட்டாம்படிக் கருப்புகள் சன்னிதானம் பொன்மேனி இராசேந்திரன், 29. அருள்மிகு வெட்டுடையார் காளி சன்னிதானம் இரா.சண்முகானந்தன், 30. அருள்மிகு கருமாரியம்மன் சன்னிதானம் ந. சண்முகம், 31. அருள்மிகு மரப்பறை அங்காள பரமேசுவரி சன்னிதானம் இர.கங்காதரக்குமார், 32. அருள்மிகு ஏகாம்பரேசுவரர் அருள்மிகு பசிய இளந்தலைகளை மாலையாகப் பூண்ட கபாலீசுவரி சன்னிதானம் சீ. மோகன் முதலியவர்கள் அடுத்தடுத்து விரைந்து தயாராகியே தீருவார்கள், தீருவார்கள், தீருவார்கள்.

இப்படி உடம்பில் உள்ள 32 அங்கங்களைப் போல போர்க்கால போர்க்கோல நிலைமை முப்பத்திரண்டு பேர்களை நமது முக்காலக் கணிச்சியான வலைச்சேரிப் பட்டி பாலுச்சாமி இராசேசுவரி போல் விரைவில் தயாராகிட இருக்கிறார்கள்! தயாராகிட இருக்கிறார்கள்! தயாராகிட இருக்கிறார்கள்! தயாராகியே தீருவார்கள்! தயாராகியே தீருவார்கள்! தயாராகியே தீருவார்கள்! என்ற மகிழ்ச்சி நிறை செய்தி உங்களுக்கு ஊக்கமளிக்கட்டும்.

இந்த மாதம் ஏப்ரல் 30ஆம் தேதி இரவு சித்தர் தேரையரும், அவரது துணைவியார் மல்லிகா தேரையரும் காளீசுவரன் காளீசுவரியாக அருட்போருக்காக அருட்படை திரட்டப் புறப்படுகிறார்கள். அவர்களோடு பாரதப் போரின் பெருவீரன் கடோத்கசன் திருத்தோன்றலான கும்மிடிப்பூண்டி சுப்பிரமணியமும் வருகிறார். இவர்கள் மூவருடன் சேர்ந்து செயல்பட மதுரை வலைச்சேரிபட்டியிலிருந்து இராசேசுவரி பாலுச்சாமியும், பாலுச்சாமியும் ஆக இந்த 5 பேர்களும் நமது அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் பெ. சுப்பையா அவர்களின் செயல்திட்டப்படி திருமானூர் வட்டாரம், தாத்தா அருட்போருக்காக மண்குதிரை செய்த கோவிலூர், பழுவூர் காளி, வெற்றிவேல் தடக்கைக் காளி, சிறுவாச்சியூர் மதுரைக் காளி, தொட்டியம் மதுரைக் காளி முதலிய இடங்களுக்கெல்லாம் அருள்மிகு ஆத்தாள் சமயபுரம் மாரியம்மன் தேர்த் திருவிழாவின் வாழ்த்துப் பெற்ற தொடர் முயற்சியாகச் செயல்பட உள்ளார்கள்.

8. வருகின்ற 25-4-91 மதுரையில் நிர்வாகக் குழு கூடுகிறது. அதில் கலந்து கொள்ளும் முக்காலக் கணிச்சி தஞ்சைத் தாத்தாவின் அருளாணைப்படி 26-4-91 வெள்ளிக்கிழமை காலை முதல் மாலை வரை அருள்மிகு மதுரைத் தாத்தா பாண்டி முனீசுவரர் ஆலய வட்டாரத்தில் நமது பதினெண்சித்தர் மடம் என்ற விளம்பரத்

திரைச்சீலையின் கீழ் நின்று அருட்கணிப்புப் பணியைத் துவக்குகிறார். முடிந்தவரை இப்பணி வாராவாரம் தஞ்சைத் தாத்தாவின் ஆலய வட்டாரத்தில் தொடர்ந்து நடைபெற திட்டமிடப்பட்டிருக்கிறது என்ற சிறப்பான செயலூக்க நிகழ்ச்சி தங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் எண்ணி ஊக்கமுடன் செயல்படுங்கள்.

**ஞானாச்சாரியார் குருதேவருக்காக**
**பச்சைமலை வீரப்பட பத்திரகாளி சன்னிதானம்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் ஒருவரின் கையெழுத்தில் ஆரம்பித்து, பிற்பாதியில் சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் தொடர்ந்து முடிவடைந்தது.//**

# <u>பிறமண் அருளிய இந்துவேதம்</u>

“... ... ... இந்து வேதத்தால்தான், மதத்தின் பெயரால் தனித்தனிக் கூட்டங்களாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்ற மக்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்த முடியும். இந்துவேதம் ஒன்றுதான் தெளிவாகக் கூறுகிறது:- “எல்லா நாடுகளிலும் அவ்வப்போது தோன்றக் கூடிய அருளாளர்கள் இருக்கிறார்கள். கடவுள்கள் அருள் பெற்ற அருளாளர்களால் கூறப்படுகின்ற வேதங்கள் அந்தந்த அருளாளர்களின் அநுபவமே ஆகும். எனவே, எந்த நாட்டுக் கடவுளையும், மதத்தையும் மறுக்கவும், வெறுக்கவும் கூடாது, எதிர்க்கவும் கூடாது, பகைக்கவும் கூடாது, சிதைத்துச் சீரழிக்க முற்படவும் கூடாது. ஏனென்றால், அந்த நாட்டுக்கு உரியதே அந்தந்த நாட்டுக் கடவுளும், வேதமும். எனவே, எந்த ஒரு நாடும், தன்னுடைய வேதத்தையோ, மதத்தையோ மற்ற நாடுகளில் பரப்ப முற்படக் கூடாது, பரப்ப முற்படக் கூடாது, பரப்ப முற்படக் கூடாது, பரப்ப முற்படவே கூடாது. அதாவது, மதமாற்றுப் பணி என்ற செயலே இருக்கக் கூடாது, இருக்கக் கூடாது, இருக்கக் கூடாது, இருக்கவே கூடாது. அதைவிட ஒரு பெரும் பாவமான செயல் இல்லை; மிகப்பெரிய மாபெருந் தவறான செயலும் இல்லை. ... ... ...”

**//குருதேவர் செவ்வாய்க்கிழமை 12-2-91 மாலை உடல் பயிற்சிக்காக இரயில் நிலைய நடைமேடையில் நடந்து கொண்டிருக்கும் போது கூறியவை.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் (கி.பி.785 - 1040)...



மெய்ஞ்ஞானக்கொடி

...பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த **ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."
- குருபாரம்பரிய வாசகம்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-